**அயகம பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 06 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அயகம பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

05 கணக்கு விடயங்களுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் படியான மீதிக்கும் இடையே ரூபா 10,275,834 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

#### 1.3.2 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் 06 மயான நிலங்களுக்குரிய உரித்துறுதிகள் காணப்படாதிருந்ததுடன் ஒரு காணிக்குரிய உரித்துறுதியும் நில வரைபடமும் காணப்படவில்லை.

### 1.3.3 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

ரூபா 298,414 கூட்டுத்தொகையான நிலுவையாக இருந்த வாடகை வருமானம் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,030,491 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,588,026 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 557,535 குறைவொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 557,535 இனால் குறைவடைந்தது தொடர்பில் 02 விடயங்களின் வருமானம் ரூபா 4,138,153 இனால் குறைவடைந்தமை மற்றும் 02 விடயங்களில் செலவினம் ரூபா 137,680 இனால் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 520 | 615 | 216 |
| வாடகை | 3,552 | 3,459 | 11 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 253 | 480 | 17 |
| ஏனைய வருமானம் | 21,085 | 18,450 | 7,235 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது ஆதனவரி, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் சேவைகளுக்கான கட்டணம் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவினைவிட முறையே 44 சதவீதம், 31 சதவீதம் மற்றும் 118 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் மற்றும் ஏனைய வருமானங்கள் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட அளவினை விட முறையே 30 சதவீதத்தாலும் 70 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது.

### 2.3.3 வாடகை

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 11 கடைகளிலிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 794,521 கூட்டுத்தொகையான வாடகை 2017 ஆகஸ்ட் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஏனைய வருமானம்

சபையினால் அமுல்படுத்தப்பட்ட 11 நீர் உத்தேசத் திட்டங்களில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 19,840 தொகையான நிலுவை நீர்க் கட்டணம் 2017 ஆகஸ்ட் வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------

### 3.1 செயலாற்றல்

--------------------------

மீளாய்வாண்டில் பிரதேச சபையை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம், உள்ளூராட்சி நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகளைக் கட்டியெழுப்பும் மூலதன நிகழ்ச்சித்திட்டம், பன்முகப்படுத்தப்பட்ட நிதியம் மற்றும் மாகாண சபை நிதியத்தின் கீழ் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 16,149,897 தொகையான 49 வேலைகளை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கூட்டுமொத்தமாக ரூபா 6,331,835 செலவில் 20 வேலைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் மயான நிலங்களுக்காக வேலியை அமைத்தல் 2017 ஆகஸ்ட் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுகாதார சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டிற்காக மலசலகூட உதவி வழங்குவதற்காக ரூபா 75,000 தொகை ஒதுக்கப்பட்டு, 14 நலனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், ஒரு நலனாளிக் கேனும் நிதியுதவி வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சுகாதார சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தாய், சேய் சிகிச்சை நிலையத்திற்காக 2016 ஆம் ஆண்டிற்கு ரூபா 50,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு தாய், சேய் சிகிச்சை நிலையத்திற்கு மாத்திரம் ரூபா 9,600 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,079,017 ஆக இருந்ததுடன் உரிய கணக்குகளில் பதிவழிப்பதற்கோ அல்லது உரிய தரப்பினர்களுக்குத் தீர்த்துவைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) புறநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 9,821,210 செலவில் 56 கடைகளுடன் அயகம வாராந்த சந்தை நிர்மாணம் 2015 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 சனவரி வரையிலும் கட்டிடத்திலிருந்து வருமானம் உழைக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 02 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையிலான காலம் பயன்படுத்தப்படாதிருந்த சபைக்குச் சொந்தமான வாகனம் மற்றும் 04 இயந்திர உபகரணங்கள் 2017 ஆகஸ்ட் வரையிலும் தேவையான பழுதுபாாத்தல்களை மேற்கொண்டு செயற்படக்கூடிய நிலைக்கு கொண்டுவருவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சிலிருந்து கிடைத்த மோட்டார் கிறேடரைப் பயன்படுத்துவதிலுள்ள வசதியீனங்களால் 02 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---

சபையினால் கழிவுப் பொருட்களை அகற்றும் போது உக்கும் கழிவுகள் அயகம நகரத்தின் விளையாட்டு மைதானத்திற்கு அருகில் குழி வெட்டி மூடப்பட்டும், உக்காத கழிவுகள் உறைகளில் இட்டு சபையின் வளவிலும் வைக்கப்பட்டிருந்ததுடன் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கோ அல்லது அழிப்பதற்கோ குறித்த திட்டமொன்றை பின்பற்றுவதற்கு தவறியிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 41 செலவின விடயங்களில் ரூபா 1,239,100 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 10 செலவின விடயங்களில் ரூபா 1,757,644 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாட்டில் 85 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக் காணப்பட்டது.

## 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | | நிதிக்கூற்றுக்களுக்கும் பட்டோலைகளுக்குமிடையே இணக்கமின்மைகள் காணப்பட்டமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| | (ii) | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் இனங்காணப்படாமை. |
| (இ) சொத்துக் கட்டுப்பாடு | | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை. |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை. |